*பிரஸார் பாரதி*

*அகில இந்திய வானொலி, சென்னை - 4*

*23 10 2025* *6.30*

*வியாழக்கிழமை* *மாலை*

*<u>மாநிலச் செய்திகள்</u>*

*<u>தலைப்புச் செய்திகள்</u>*

- *சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

- *டெல்டா மாவட்டங்களில் போர்க்கால அடிப்படையில் நெல் கொள்முதல் செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் வலியுறுத்தியுள்ளார்.*

- *மருத்துவக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பான வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று பிஜேபி குற்றம்சாட்டியுள்ளது.*

- *வங்கக் கடலில் அடுத்த 24 மணிநேரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

- *ஆசிய இளையோர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Shaina Manimuthu காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*--- இனி விரிவான செய்திகள் ----*

*சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக நாளிதழில் வெளியான கட்டுரையை அவர் பகிர்ந்துள்ளார்.*

*வாகனங்கள் ஏற்றுமதியும் அதிகரித்து வருவதாக மற்றொரு பதிவில் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.*

*>><><><><<*

*பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தலைமையில் பாதுகாப்புத் தளவாடங்கள் கொள்முதல் குழுமத்தின் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.*

*இதில் 79 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான கொள்முதல் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.*

*>><><><><<*

*டெல்டா மாவட்டங்களில் போர்க்கால அடிப்படையில் நெல் கொள்முதல் செய்திட முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் வலியுறுத்தியுள்ளார்.*

*இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திமுக அரசின் அலட்சியம் காரணமாக டெல்டா மாவட்டங்களில் 20 லட்சம் டன் நெல் வீணாகும் சூழல் உருவாகியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*விவசாயிகளின் வேதனையை அறிந்து கொள்ளாமல் திமுக அரசு செயல்படுவது கண்டனத்திற்குரியது என்றும் அவர் கூறியுள்ளார்.*

*பருவமழை தீவிரமடைந்துள்ளதால் நெல் கொள்முதலை விரைவாக முடித்திட வேண்டும் என்றும் டாக்டர் எல் முருகன் அந்த அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*>><><><><<*

*டெல்டா மாவட்டங்களில் நெல் கொள்முதல் நடவடிக்கைகளை தமிழக அரசு விரைவாக மேற்கொள்ள வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.*

*இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நெல் கொள்முதல் தொடர்பாக முதலமைச்சரும், மாநில அமைச்சர்களும் முன்னுக்குப் பின் முரணான தகவல்களை வழங்குவதாக கூறியுள்ளார்.*

*நெல் கொள்முதலுக்கான நடவடிக்கைகளை திமுக அரசு முன்கூட்டியே திட்டமிட்டு மேற்கொள்ளவில்லை என்றும் அவர் குறை கூறியுள்ளார்.*

*விவசாயிகள் விளைவித்த நெல்லை பாதுகாக்க வேண்டியது அரசின் கடமையாகும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.*

*>><><><><<*

*தாம்பரம், சோழிங்கநல்லூர், மதுரவாயல் பகுதிகளில் நவீன வசதிகளுடன் கூடிய அரசு மருத்துவமனைகள் ஏற்படுத்தப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம்சாட்டியுள்ளார்.*

*சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஏழை மக்களின் உடல்நலனை கிடப்பில் போடுவதுதான் உலகம் போற்றும் மருத்துவக் கட்டமைப்பா? என்று வினவியுள்ளார்.*

*>><><><><<*

*நாடுமுழுவதும் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணிகளை மேற்கொள்வது தொடர்பான இரண்டு நாள் ஆலோசனைக் கூட்டம் இன்று புதுதில்லியில் நிறைவடைந்தது.*

*தலைமை தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார் தலைமையில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாநிலங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகள் பங்கேற்றனர்.*

*வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணிகளை நாடுமுழுவதும் மேற்கொள்வதற்கான முன்னேற்பாடுகள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.*

*>><><><><><<*

*வங்கக் கடல் பகுதியில் அடுத்த 24 மணிநேரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் கூறியுள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*(சவுண்ட் பைட் – செந்தாமரைக் கண்ணன் 1 – 25 செகண்ட்ஸ்)*

*திருவள்ளூர், ராணிப்பேட்டை உள்ளிட்ட 14 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் திரு செந்தாமரைக் கண்ணன் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் – செந்தாமரைக் கண்ணன் 2 – 57 செகண்ட்ஸ்)*

இதற்கிடையே, மேட்டூர் அணையிலிருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு வினாடிக்கு 60 ஆயிரம் கனஅடி வரை அதிகரிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதால் காவிரி கரையோரங்களில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

>><><><><<

ஏற்காடு மலைப் பாதையில் ஏற்பட்டுள்ள மண் சரிவு காரணமாக பயணிகள் வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

ஏற்காட்டில் வசிப்பவர்களுக்கு மட்டும் இருசக்கர வாகனத்தில் செல்ல அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – விஜயகுமார் – 54 செகண்ட்ஸ்)

>><><><><<

<u>மாவட்டச் செய்திகள்</u>

நீலகிரி மாவட்டம் உதகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தண்ணீர் தட்டுப்பாட்டை போக்கும் வகையில் 27 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகளை மாநில அமைச்சர் திரு சாமிநாதன் இன்று தொடங்கி வைத்தார்.

----------------

தென்காசி மாவட்டத்தில் நடைபெற்று வரும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை ஆட்சியர் திரு கமல் கிஷோர் இன்று ஆய்வு செய்தார்.

----------------

பெரம்பலூர் மாவட்டம் தம்பை கிராமத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கண்காணிப்பு அலுவலர் திருமதி லட்சுமி இன்று ஆய்வு செய்தார்.

----------------

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை பகுதியில் இயற்கை சீற்றங்களை எதிர்கொள்வது தொடர்பான பயிற்சி தீயணைப்புத் துறை சார்பில் தன்னார்வலர்களுக்கு இன்று வழங்கப்பட்டது.

-----------------

வேலூர் அருகே மழைநீருடன் கழிவு நீர் தேங்கியிருக்கும் குடியிருப்புப் பகுதிகளில் வசித்து வந்த பொதுமக்களை தீயணைப்புப் படையினர் படகு மூலம் மீட்டனர்.

----------------

திருவண்ணாமலை மாவட்டத்தில் மழை பாதிப்புகளை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆட்சியர் திரு தர்பகராஜ், இன்று அண்ணாமலையார் மலையடிவாரப் பகுதியில் ஆய்வு மேற்கொண்டார்.

-----------------

தர்மபுரி மாவட்டத்தில் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆட்சியர் திரு சதீஷ் இன்று ஆய்வு செய்தார்.

--------------------

காஞ்சிபுரம் மாவட்டம் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து உபரிநீர் திறப்பு வினாடிக்கு 750 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

>><><><><<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

ஆசிய இளையோர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Shaina Manimuthu காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*சீனாவின் Chiengdu -வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 15 வயதிற்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-17, 21-16 என்ற செட்கணக்கில் சீனாவின் Man Lin Li-ஐ வென்றார்.*

*மகளிர் இரட்டையர் பிரிவில் Deepak Raj Aditi - Ponnamma Vriddhi இணையும் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.*

*15 வயதிற்குட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவில் சுகுமாறன் மற்றும் Jagsher Singh Khangurra-வும், 17 வயதிற்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவில் லக்ஷயா ராஜேஷூம் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.*

*----------------------*

*ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.*

*---------------*

*23 வயதிற்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Nishu அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*---------------*

*உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா- நியூசிலாந்து இடையேயான ஆட்டம் மழையினால் தடைபட்டுள்ளது.*

*>> End of News <<*